[எட்டாவது பாராளுமன்றம் (முதலாவது கூட்டத்தொடர் ) – முதலாவது கூட்டம்]

இல. 1.]

# பாராளுமன்றம்

## அலுவல் ஒழுங்கு

**2015, செத்தெம்பர் 01, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

1. **கூட்டத்தினைக் கூட்டுதல் பற்றிய மேன்மை தங்கிய சனாதிபதியினது பிரகடனங்களைப் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் வாசித்தல்:**

2. **சபாநாயகர் தெரிவு.**

(4 ஆம் இலக்க நிலையியற் கட்டளை)

"4. சபாநாயகர் தெரிவிற்கான நடைமுறை பின்வருமாறு அமையும் :-

(1) சபாநாயகராகத் தெரிவுசெய்யப்படுவதற்கென ஓர் உறுப்பினரை முன்மொழிய விரும்பும் உறுப்பினர் ஒவ்வொருவரும் சம்பந்தப்பட்ட உறுப்பினர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அப்பதவியை வகிக்க அவர் சம்மதமுடையவர் என்பதை முன்கூட்டியே நிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(2) உறுப்பினர் ஒருவர் செயலாளர் நாயகத்தை விளித்து, அப்பொழுது சமுகமாயிருக்கும் இன்னோர் உறுப்பினரைச் சபாநாயகராகப் பாராளுமன்றத்திற்கு முன்மொழிந்து "......................................... (உறுப்பினரின் பெயரைக் குறிப்பிட்டு) சபாநாயகராக இப்பாராளுமன்றத்தின் அக்கிராசனத்தில் அமர்வாராக" எனப் பிரேரித்தல் வேண்டும். இப்பிரேரணை வழிமொழியப்படல் வேண்டும். ஆனால் இதனில் விவாதம் அனுமதிக்கப்படலாகாது.

(3) ஒரேயொரு உறுப்பினரே இவ்வாறு சபாநாயகராக முன்மொழிந்து வழிமொழியப்படின் அவர் தெரிவானாரென செயலாளர் நாயகம் வினாவின்றியே பிரகடனம் செய்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அவ்வாறு முன்மொழியப்பட்டு வழிமொழியப்படின் இரண்டு நிமிடங்களுக்கு வாக்கழைப்பு மணி அடித்த பின்னர் குடவோலை மூலம் சபாநாயகர் ஒருவரை தெரிவு செய்வதற்கு பாராளுமன்றம் முற்படும்.

(4) குடவோலை வாக்கெடுப்பு ஒன்றின் பொருட்டு செயலாளர் நாயகம், சமுகமளித்துள்ள உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தாம் வாக்களிக்க விரும்பும் உறுப்பினரின் பெயரை எழுதலாமெனக் குடவோலை ஒன்றினைக் கொடுத்தல் வேண்டும். வாக்களிக்கும் உறுப்பினர் குடவோலையில் எழுதிய பெயர் வெளியே தெரியாவண்ணம் குடவோலையினை மடிப்பதுடன் அதில் கையொப்பமிடலும் வேண்டும்.

(5) குடவோலை, செயலாளர் நாயகத்தால் அல்லது அவர் பதிலாளராக்கும் பாராளுமன்றத்தின் பிறிதோர் உத்தியோகத்தரால் சேகரிக்கப்பட்டுச் செயலாளர் நாயகத்தால் பாராளுமன்றத்தின் சபாபீடத்தில் வைத்து எண்ணப்படல் வேண்டும். அந்த வாக்கெடுப்பின் முடிவை செயலாளர் நாயகம் பிரகடனம் செய்தல் வேண்டும்.

(6) (அ) இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் முன்மொழியப்படுமிடத்து, முதலாவது குடவோலை வாக்கெடுப்பில் ஓர் வேட்பாளர் ஏனைய வேட்பாளர்கள் ஒருமித்துப் பெற்ற வாக்குகளிலும் பார்க்க கூடுதலான வாக்குகளைப் பெறத் தவறினால் மிகக் குறைந்த வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் சபாநாயகர் தெரிவிலிருந்து விலக்கப்பட்டு குடவோலை வாக்கெடுப்பு மேலும் தொடருதல் வேண்டும். ஒரு வேட்பாளர் (சந்தர்ப்பத்திற்கமைய) எஞ்சும் ஒரு வேட்பாளரிலும் கூடுதலான வாக்குகளை அல்லது எஞ்சிய வேட்பாளர்கள் ஒருமித்துப் பெற்ற வாக்குகளிலும் பார்க்க கூடுதலான வாக்குகளைப் பெறும்வரை ஒவ்வொரு குடவோலை வாக்கெடுப்பிலும் மிகக் குறைந்த வாக்குகள் பெறும் வேட்பாளர் விலக்கப்பட்டு வருவார்.

(ஆ) மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே குடவோலை வாக்கெடுப்பு நிகழுமிடத்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் சம அளவான வாக்குகளைப் பெற, அவர்களுள் ஒருவர், இதன் (அ) பிரிவின்படி தெரிவிலிருந்தும் விலக்கப்பட வேண்டுமாயின், அத்தகைய சம அளவான வாக்குகளைப் பெற்றவர்களில் எவரைத் தெரிவிலிருந்து விலக்குவதென்பதை சீட்டிழுப்பின் மூலம் நிர்ணயித்தல் வேண்டும். சீட்டிழுப்பு எவ்வாறு நடைபெற வேண்டுமென்பது செயலாளர் நாயகத்தின் தீர்ப்பைச் சார்ந்தது.

(இ) இரு வேட்பாளர்களுக்கிடையே நிகழும் குடவோலை வாக்கெடுப்பில் சம அளவு வாக்குகள் கிடைக்குமிடத்து மேலுமொரு குடவோலை வாக்கெடுப்பு நடத்துதல் வேண்டும். அக்குடவோலை வாக்கெடுப்பின் இறுதியிலும் வாக்குகளின் எண்ணிக்கை சம அளவினதாகவேயிருந்தால் அவ்வேட்பாளர்களுள் எவரைத் தெரிவிலிருந்து விலக்க வேண்டுமென்பது சீட்டிழுப்பின் மூலம் நிர்ணயிக்கப்படல் வேண்டும். அச்சீட்டிழுப்பு எவ்வாறு நடைபெற வேண்டுமென்பது செயலாளர் நாயகத்தின் தீர்ப்பைச் சார்ந்தது.

(7) குடவோலைகள் எண்ணப்பட்டதும் அவற்றை ஒரு பேழையிலிட வேண்டும். உறுப்பினர் ஒருவர் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டார் எனப் பிரகடனமானதும் பாராளுமன்றத்தின் முன்னிலையில் அப்பேழையை மூடி முத்திரையிட்டு ஒரு பஞ்சாங்க மாதத்திற்கு செயலாளர் நாயகத்தின் பாதுகாப்பில் வைத்தல் வேண்டும். பின்னர் பாராளுமன்றத்திலிருந்து தமக்குக் கிடைக்கும் பணிப்பிற்கமையச் செயலாளர் நாயகம் இக்குடவோலைகளை எரித்துவிட்டு அவ்வாறு செய்யப்பட்டதாகப் பாராளுமன்றத்திற்கு அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.”

**3. சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம்:**

(5 ஆம் இலக்க நிலையியற் கட்டளை)

“5. (1) தாம் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் சபாநாயகர் அங்கு சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள் அனைவரும் சத்தியப்பிரமாணத்தை அல்லது உறுப்பிரமாணத்தைச் செய்து கொள்வதற்கும் கையொப்பமிடுவதற்கும் வகை செய்தல் வேண்டும். செயலாளர் நாயகத்தால் சத்தியப் பிரமாணம் அல்லது உறுதிப் பிரமாணம் செய்து வைக்கப்படுதல் வேண்டும்.

(2) சத்தியப் பிரமாணத்தை அல்லது உறுதிப் பிரமாணத்தைச் செய்து கொண்டவுடன் சபாநாயகர் முதலாக ஒவ்வோர் உறுப்பினரும் செயலாளர் நாயகம் அதற்கென வைத்திருக்க வேண்டிய புத்தகத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

(3) ஏற்கனவே சத்தியப்பிரமாணத்தை அல்லது உறுதிப்பிரமாணத்தைச் செய்து கொள்ளாத ஓர் உறுப்பினர், பாராளுமன்றம் கூறுகின்ற எத்தினத்திலும் 19ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் நியமிக்கப்படும் நேரத்தில் சபாபீடத்தில் சமுகமளிக்கலாம். அவருக்கு சத்தியப் பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்து வைக்கப்படும், இதன் பின்னர் அவர் புத்தகத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.".

4. **பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும் தெரிவு:**

(6 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளை)

"6. (2) பிரதிச் சபாநாயகரதும், குழுக்களின் பிரதித் தவிசாளரதும் தெரிவு முறை, தெரிவைச் சபாநாயகர் நடாத்துவதைத் தவிர்த்த மற்றெல்லா விதத்திலும், கூடுமானவரை சபாநாயகர் தெரிவு முறையை ஒத்திருத்தல் வேண்டும்." .

5. **குழுக்களின் பிரதித் தவிசாளர் தெரிவு:**

(6 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளை)

6. **சனாதிபதியின் செய்தி:**

*அதிமேதகு சனாதிபதி சபாகூடத்திற்குள் வருகை தந்ததன் பின்னர் பாராளுமன்றம் மீண்டும் கூடும் போது ஒழுங்கு அலுவல்கள் பின்வருமாறு அமையும் :-*

7. **அதிமேதகு சனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்றுதல்:**

8. **பிரேரணை முன்னறிவித்தல்.**

1. கௌரவ பிரதம அமைச்சர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2015 செத்தெம்பர் மாதம் 03 ஆம் திகதி, வியாழக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2. கௌரவ பிரதம அமைச்சர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2015 செத்தெம்பர் மாதம் 03 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

9. **பாராளுமன்ற ஒத்திவைப்பு.**